Land for Scheduled Castes

* 595 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்காரிடமிருந்து பூதான நிலங்களையும், இதர சர்க்கார் புறம்போக்கு தரிசு நிலங்களையும் ஷெட்யூல்டு வகுப்பினருக்குப் பிரித்துக் கொடுப்பது பற்றி ஏதேனும் உத்திரவு வந்திருக்கிறதா?

(ஆ) அப்படியானல், அதன் விவரமென்ன?

(இ) இதுவரை இம்மாநிலத்தில் பூதானமாகக் கிடைத்த நிலம் எவ்வளவு?

(ஈ) அதில் நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்தது எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) to (d) The information is being collected and will be placed on the table of the House as soon as possible.

Rural Water-supply Works

* 596 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of Rural Water-supply Works sanctioned during 1959–60 and not yet completed in Udaiyarpalayam taluk, Tiruchirappalli district;

(b) the reasons for the delay; and

(c) the names and the present stage of the works that have not yet been completed?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) to (c) A statement [a] is placed on the table of the House.

SRI K. R. VISWANATHAN: இந்த 44 வேலைகளில், இது வரைக்கும் எத்தனை வேலைகள் முடிந்திருக்கின்றன?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ஜாபிதாவில் வேலைகள் எந்தெந்த கட்டத்தில் இருக்கின்றன என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

SRI M. KULANDAISAMI GOUNDER: ஏர்க்காட்டில் குடி தண்ணீர் திட்டம் ஏதாவது விவகாரத்திற்கு வருமா? அங்குள்ள ஏரி தண்ணீரை குடி தண்ணீருக்குக் கொண்டு வருவதற்கு அவசிய மாக இருப்பதால் அதற்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்யுமா? 9-00 a.m.

MR. SPEAKER: நீங்கள் கேட்கும் கேள்வி மூல கேள்விக்கு சம்பந்தமில்லை.

SRI K. R. VISWANATHAN: 1959–60-க்காக அனுமதிக்கப் பட்ட வேலைகள் இன்னும் முடிக்கப்படவில்லை என்பதாக தெரிய வருகிறது. 1959–60-ல் அனுமதிக்கப்பட்ட வேலைகளை சர்க்கார்

[a] Printed as Appendix III on pages 670–672 infra.